(1)

# தமிழ் மக்கள் கூட்டணி
# அமைப்பு விதிகள்

**விதி 1: பெயர்**

இந்த அமைப்பினுடைய பெயர் தமிழ் மக்கள் கூட்டணி ஆகும். இவ் ஆவணத்தின் பின்வரும் விதிகளில் இதனைக் "கட்சி" அல்லது "த.ம.கூ." என்றும் குறிப்பிடப்படலாம்.

**விதி - 2: கொடி இலச்சினை மகுடவாசகம்**

2.1 கட்சியினுடைய கொடியானது மூன்று வர்ணங்களைக் கொண்டதாகக் காணப்படும். சிவப்பு வெள்ளை மஞ்சள் ஆகிய நிறங்கள் சமமான அளவில் கிடைத்தோற்றத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

2.2 கட்சியினுடைய இலச்சினையானது மஞ்சள் நிறப் பின்னணியில் சிவப்பு நிறத்திலான பொங்கு பானை ஆகக் காணப்படும்.

2.3 கட்சியினுடைய மகுட வாசகம் "தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவுக்காக ஒன்றுபடுவோம்" எனக் காணப்படும்.

**விதி - 3: பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**

கட்சியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான காரியாலயமும் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லைக்குள்ளேயே அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கட்சியினுடைய மத்திய குழுவால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கை பூராகவும் உள்ள மாகாணங்கள், மாவட்டங்கள், தேர்தல் தொகுதிகள், உள்ளுராட்சி எல்லைகள் என்பவற்றினுள் பொருத்தமான இடங்களில் கட்சியின் உபஅலுவலகங்களை அமைக்க முடியும். இதற்கு மேலதிகமாக கட்சியினுடைய மத்திய குழு பொருத்தமானது எனக் கருதுமிடத்து இலங்கையின் ஆட்புல எல்லைக்கப்பால் உள்ள வெளிநாடுகளில் கட்சியினது உப அலுவலகங்களை அமைக்க முடியும்.

**விதி - 4: பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகள்**

தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் பின்வரும் பிரதான நோக்கத்தினையும் ஏனைய கொள்கைகளையும் கொண்டிருக்கும். இக் கட்சியினுடைய அங்கத்தவர் ஒவ்வொருவரும் பிரதான நோக்கத்தின் மீதும் மற்றைய கொள்கைகள் மீதும் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டவர்களாகக் காணப்படுதல் வேண்டும். இப் பிரதான நோக்கம் மீது உடன்பாட்டினைக் கொண்டிராத எந்தவொருவரும் கட்சியின் உறுப்பினராக இருக்கும் தகுதியை இழந்தவராகக் கருதப்படுவார்.

4.1 பிரதான நோக்கம்

இலங்கையில் பாரம்பரிய வழிவந்த தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். இணைந்த வடக்கு கிழக்கில் அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு

இலங்கைக்குள் சமஸ்டித் தீர்வொன்றினைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தல் இக் கட்சியின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது.

4.2 கொள்கைகள்

i. இலங்கையின் வடக்கு கிழக்கு என்பது தமிழ்ப் பேசும் மக்கள் காலம் காலமாக பூர்வீகமாக பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற (தாயக) நிலப்பரப்பு என்பதுடன் இங்கு வாழ்ந்துவரும் தமிழ்ப் பேசும் மக்கள் தமக்கென தொன்மையான கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவற்றைப் பாதிக்காத வகையில் பாதுகாப்பதுடன் மேலும் வளர்ச்சியடையச் செய்தல்.

ii. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அனைத்து மக்களும் அடிப்படை உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்கள் அடிப்படையில் இன, மத, மொழி, சாதி, பால் மற்றும் பிரதேச வேறுபாடுகள் இன்றி சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதனை உறுதி செய்தல். எனினும் வடகிழக்கில் தமிழ் மொழிக்கே முன்னுரிமை வழங்கப்படும். மற்றைய மொழி பேசுவோரின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

iii. தமிழ் மக்களின் நலன்களை மேம்பாடடையச் செய்யும் நோக்குடன் இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் இதுவரை தமிழ்ப் பேசும் மக்கள் பெற்றுக்கொண்ட அதிகாரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் எமது நோக்கின் அடிப்படையிலான உரிய அதிகாரங்களை ஜனநாயக வழிமுறை ஊடாக பெற்றுக் கொள்வதற்கும் வழிவகை செய்தல்.

iv. உரிமைகளை விட்டுக்கொடுக்காத நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியினை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தல். மேலும் திறன்

v. அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, தொழில்நுட்ப மேம்பாடு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டதுவும் இளைஞர் யுவதிகளின் அதிகளவிலான பங்குபற்றலுக்கு வழிவகுப்பதுமான பொருளாதார மேம்பாட்டினை உருவாக்குதல்.

குறிப்பாக பொருளாதார ரீதியாக பலம் குன்றியவர்களை மேம்படுத்தவும் அது சம்பந்தமான பாரபட்சங்களை நீக்கவும் பொருளாதார அசமத்துவத்தை நிவர்த்திக்கவும் பாடுபடுதல்.

vi. மனித வளத்தினை விருத்திசெய்யக் கூடியதும் சமூக வரலாறுகளையும் விழுமியங்களையும் பாதுகாக்கக் கூடியதுமான கல்வி முறைமையினை முன்னெடுக்க வழிவகுப்பதுடன் அனைவருக்கும் கல்வி மற்றும் தரமான சுகாதாரம் என்பன கிடைக்க வழிவகுத்தல்.

vii. பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் அனைத்து துறைகளிலும் அவர்களின் சம உரிமையை பேணுவதற்கும் அவர்களை வலுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

viii. மற்றவற்றுடன் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, முதியவர்களின் நலன்களை பேணுவது, மாற்றுத்திறனாளிகளின் நலன்களை உறுதி செய்வது ஆகியன எமது சமூகத்தின் கடமைகளாகக் கருதப்படுகின்றன. அந்த வகையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதுடன் முதியவர்களின் நலன்களில் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சார்பில் விசேட அக்கறை செலுத்துதல்.

ix. வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம், கடற்தொழில் கைத்தொழில் மற்றும் சேவைத்துறை என்பவற்றினை சமமான அளவு முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுப்பதுடன் சேவைத் துறையில் அதிகளவிலான வேலை வாய்ப்பினை உருவாக்கக் கூடிய திட்டங்களை முன்னெடுத்தல். மேலும் வடக்கு கிழக்கில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஆகக் குறைந்தது ஒருவராவது நிரந்தர வேலை வாய்ப்பினைக் கொண்டிருக்கக் கூடிய வகையில் பொருளாதாரத்தினை வடிவமைத்து நிறைவேற்றுதல்.

x. கிராமிய மட்டத்தில் மக்கள் தற்சார்புடன் சேர்ந்த தன்னிறைவைப் பெற ஆவன செய்தல்

xi. தமிழ்ப் பேசும் மக்கள் தமது சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களில் உயர்வானவர்களாகத் திகழக்கூடிய வகையிலான நீண்ட காலத் திட்டங்களினை முன்னெடுத்தல்.

xii. வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அரச மற்றும் தனியார் துறை செயற்பாடுகளில் லஞ்சம் மற்றும் ஊழல் என்பன காணப்படாத ஓர் வெளிப்படைத் தன்மையான அரசாங்கம்/நிர்வாகம் உருவாக வழிவகுத்தல்


xiii. தமிழ் மக்களுடைய அரசியல் அதிகாரங்களை ஜனநாயக வழிமுறையூடாக அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தும் பொருட்டு சகல மட்டங்களிலும் தரமான மற்றும் வினைத்திறனான தலைமைத்துவத்தினை வழங்குதல்.

xiv. உள்நாட்டிலும் உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி வடகிழக்கு தமிழ் சமூகத்துக்கு அரசியல் பொருளாதார ரீதியாகப் பலமான ஒரு ஆதரவு சக்தியை உருவாக்குதல்.

xv. மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாகவும் ஒத்தாசையாகவும் இருப்பதுடன் அவர்களுடனான உறவுகளை எல்லா மட்டங்களிலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

## விதி - 5: கட்சியின் கட்டமைப்பு

தமிழ் மக்கள் கூட்டணியின் கட்டமைப்பு பின்வருமாறு காணப்படும்




### 5.1 வட்டாரக் கிளைகள்

i உள்ளூராட்சி சபைகளின் கீழ் வருகின்ற தனி ஒரு வட்டாரத்துக்கென அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரங்களை இணைத்தோ வட்டாரக்கிளைகள் உருவாக்கப்படலாம். பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைய ஏதேனும் ஒரு வட்டாரக்கிளையை உருவாக்கலாம்.

ii வட்டாரக் கிளையின் எல்லைகளையும் பகுதிகளையும் நிர்ணயித்துக்கொள்ளவும் அதனில் ஏதேனும் மாற்றம் செய்யவும் மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு.

iii குறித்த வட்டாரப் பகுதியில் வதிவோர் அவ் வட்டாரக் கிளையில் உறுப்புரிமை பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும் பொருத்தமானது எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த வட்டாரப் பகுதிக்கு அப்பால் வசிக்கும் ஒருவரை வசதியான வட்டாரக் கிளையில் இணைத்துக் கொள்வதற்கான அதிகாரத்தினை மத்திய குழு கொண்டிருக்கும்.

iv ஒரு வட்டாரக் கிளையினை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது ஏழு உறுப்பினர்கள் காணப்படுதல் வேண்டும். முடியுமானவரை அவர்களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பெண்களாக இருக்க வேண்டும்.

v முப்பத்தைந்து உறுப்பினர்களுக்கு உட்பட்ட எண்ணிக்கையினைக் கொண்ட வட்டாரக் கிளை ஒன்றில் அதன் நிர்வாகத்துக்கென தலைவர், செயலாளர், மற்றும்

பொருளாளர் என்போர் தெரிவு செய்யப்படலாம். முப்பத்தைந்து உறுப்பினர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினைக் கொண்ட வட்டாரக் கிளை ஒன்றில் மேற்கூறப்பட்ட மூன்று பதவிநிலைகளுக்கு மேலதிகமாக உப தலைவர், உப செயலாளர் என்ற இரு பதவி நிலைகளுக்குப் பொருத்தமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படலாம். இவ்வாறு தெரிவு செய்யப்படும் நிர்வாகக் குழுவினர் வட்டாரக் குழுவின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகக் காணப்படுவர்.

vi வட்டாரக் கிளையின் பதவி நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அல்லது ஏற்கனவே வட்டாரக் கிளையின் செயற்குழுவின் பதவி நிலையில் உள்ள ஒருவர் பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைக்கமைய மத்திய குழு அத்தகைய ஒருவரையோ அல்லது வட்டாரக் கிளையின் முழு நிருவாகத்தினரையோ பதவிநீக்கம் செய்யலாம்.

vii கட்சியின் மத்திய குழுவினால் காலத்துக்கு காலம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் பற்றுறுதியுடன் செயற்படுத்துவது ஒவ்வொரு வட்டாரக் கிளையினதும் கடமையாகும்.

viii வட்டாரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது கிழமையில் மூன்று மணித்தியாலங்கள் கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இது குறித்த சுருக்கமான அறிக்கை ஒன்று வட்டாரக் கிளை செயலாளரால் மாதாந்தம் கட்சியின் மத்திய குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

ix வட்டாரக் கிளை ஒன்று ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையேனும் சந்தித்து தமது செயற்திட்டங்கள் குறித்து கலந்துரையாட வேண்டும். வட்டாரக் கிளை ஒன்று தமது வட்டாரத்துக் உட்பட்ட மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பில் வட்டாரக் கிளை தொகுதிக் கிளையினரிடம் அல்லது மாவட்டக் கிளையினரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

x வட்டாரக் கிளை ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி அதன் செயற்குழுவைத் தெரிவுசெய்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒவ்வொரு வருட செப்டம்பர் மாதத்தில் ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் வட்டாரக் கிளையின் செயலாளர் அதன் தலைவரின் ஒப்புதலுடன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினைக் கூட்டுவார். அக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும்.

(அ) விதி 5.1(v) இல் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாக வட்டாரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.

(ஆ) குறித்த வட்டாரக் கிளையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கட்சியின் தொகுதிக் கிளைக்கு மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்தல். இவ்வாறு தெரிவு செய்யப்படும் உறுப்பினர் வட்டாரக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகவோ அல்லது கிளையின் ஏதேனும் ஒரு உறுப்பினராகவோ காணப்படலாம்.

(இ) வட்டாரக் கிளையின் பொருளாளர் ஆண்டுக்குரிய கணக்கறிக்கையினையும் செயலாளர் செயற்பாட்டு அறிக்கையினையும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்

xi. மத்திய குழுவின் அங்கீகாரம் பெற்ற கணக்குப் புத்தகத்தில் அங்கத்தவர் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் ஏனைய அன்பளிப்புக்கள், கொடைகள் போன்றன மூலம் சேர்க்கப்பட்ட தொகைகள் கிளைப் பொருளாளரால் பதிவுசெய்யப்படும். ஒவ்வொரு மாதக் கணக்கும் கிடைத்த பணத்தில் 70% பணமும் விபரங்களுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கட்சியின் பொருளாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

xii. வட்டாரக் கிளையின் உறுப்பினர் பணத்தில் இருபது சதவீதத்தினை கிளையின் செலவினத்திற்கு வைத்துக்கொண்டு பத்து சத வீதத்தினை தொகுதிக் கிளைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மிகுதி எழுபது சதவீத பணத்தை கட்சியின் பொருளாளருக்கு அனுப்பவேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டம் இடம் பெற்று அடுத்து வரும் பதினைந்து நாட்களுக்குள் உரிய தொகைகள் மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். தாமதம் ஏற்படும் போது இது பற்றிய விபரங்கள் கட்சியின் பொருளாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். தமது செயற்பாடுகளுக்கு அல்லது செயற்திட்டங்களுக்கு மேலதிக பணம் தேவைப்பட்டால் உரிய விபரங்கள் அல்லது திட்ட முன்மொழிவுகளுடன் கட்சியின் பொருளாளருக்கு கிளைகள் விண்ணப்பம் செய்யலாம். கிளைகளின் விண்ணப்பம் தொகுதி கிளைகளின் ஊடாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

xiii. வட்டாரக் கிளையின் செயலாளர் அக் கிளையின் முழு உறுப்பினர் பட்டியலையும் பேணிக் கொள்ளவேண்டும் என்பதோடு அதன் பிரதி ஒன்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் இறுதியில் புதிய உறுப்பினர் பட்டியலையும் உறுப்பினரது ஏனைய விபரங்களையும் மத்திய குழுவிற்கு அடுத்த பதினைந்து நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

xiv. வட்டாரக் கிளையின் உறுப்பினர் முழுப் பட்டியலையும் பேணிவைத்திருத்தல் மற்றும் கிளையின் வரவு செலவு கணக்குகளை பேணிவைத்திருத்தல் தொடர்பில் மத்திய குழுவிற்கும் கட்சியின் பொருளாளர்க்கும் வட்டாரக் கிளையின் தலைவர் செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கூட்டுப் பொறுப்புடையவர்களாகக் கருதப்படுவர்.

## 5.2 தொகுதிக் கிளைகள்

i. குறித்த தேர்தல் தொகுதி ஒன்றின் எல்லைக்குள் நிறுவப்பட்ட அனைத்து வட்டாரக் கிளைகளையும் ஒருங்கிணைத்து தொகுதிக் கிளைகள் நிறுவப்படலாம். பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைய தொகுதிக் கிளையொன்றை உருவாக்கலாம்.

ii. தொகுதிக் கிளையின் எல்லைகளையும் பகுதிகளையும் நிர்ணயித்துக்கொள்ளவும் அதனில் ஏதேனும் மாற்றம் செய்யவும் மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு.

iii. தனது தொகுதிக்குள் வருகின்ற அனைத்து வட்டாரக் கிளைகளையும் அவற்றின் அலுவல்களையும் இணைப்பதுவும் ஒழுங்குபடுத்துவதும் தொகுதிக் கிளையின் முக்கிய கடமையாகும்

iv. ஒரு தொகுதிக் கிளையினை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது ஐந்து வட்டாரக் கிளைகளை ஒருங்கிணைத்திருத்தல் வேண்டும்.

v. விதி 5.1 (x)(ஆ) குறிப்பிட்டவாறு ஒவ்வொரு வட்டாரக் கிளையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா மூன்று பிரதிநிதிகள் தொகுதிக் கிளையின் உறுப்பினர்களாகக் காணப்படுவர்.

vi. தொகுதிக் குழுவின் உறுப்பினர்கள் ஒன்றுகூடி தமக்குள் ஒரு தலைவர் ஒரு செயலாளர் ஒரு பொருளாளர் மற்றும் இரண்டு செயற்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட செயற்குழுவினர் மத்திய குழுவின் நெறிப்படுத்தல்களின் கீழ் தொகுதிக்கிளையின் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக இருப்பர்.

vii. தொகுதிக் கிளையின் பதவி நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அல்லது ஏற்கனவே தொகுதிக் கிளையின் செயற்குழுவின் பதவி நிலையில் உள்ள ஒருவர் பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் கட்சியின் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைக்கமைய மத்திய குழு அத்தகைய ஒருவரையோ அல்லது தொகுதிக் கிளையின் முழு நிருவாகத்தினரையோ பதவிநீக்கம் செய்யலாம்.

viii. கட்சியின் மத்திய குழுவினால் காலத்துக்கு காலம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் பற்றுறுதியுடன் செயற்படுத்துவது ஒவ்வொரு தொகுதிக் கிளையினதும் கடமையாகும்.

ix. தொகுதிக் கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது கிழமையில் இரண்டு மணித்தியாலங்கள் கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இது குறித்த சுருக்கமான அறிக்கை ஒன்று தொகுதிக் கிளை செயலாளரால் மாதாந்தம் கட்சியின் மத்திய குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

x. தொகுதிக் கிளை ஒன்று ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையேனும் சந்தித்து தமது செயற்திட்டங்கள் குறித்து கலந்துரையாட வேண்டும். தொகுதிக் கிளை ஒன்று தமது தொகுதிக்கு உட்பட்ட மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பில் தொகுதிக் கிளை மாவட்டக் கிளையினரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

xi. தொகுதிக் கிளை ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி தமது செயற்குழுவைத் தெரிவுசெய்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒக்டோபர் மாதத்தில் ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் வட்டாரக் கிளையின் செயலாளர் கிளைத் தலைவரின் ஒப்புதலுடன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினைக் கூட்டுவார். அக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும்.

(அ) விதி 5.2(vi) இல் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாக தொகுதிக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களை தெரிவு செய்தல்.

(ஆ) குறித்த தொகுதிக் கிளையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கட்சியின் மாவட்டக் கிளைக்கு மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்தல். இவ்வாறு தெரிவு செய்யப்படும் உறுப்பினர் தொகுதிக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகவோ அல்லது கிளையின் ஏதேனும் ஒரு உறுப்பினராகவோ காணப்படலாம்.

(இ) தொகுதிக் கிளையின் பொருளாளர் ஆண்டுக்குரிய கணக்கறிக்கையினையும் செயலாளர் செயற்பாட்டு அறிக்கையினையும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(xii) மத்திய குழுவின் அங்கீகாரம் பெற்ற கணக்கு புத்தகத்தில் வட்டாரக் கிளையால் அனுப்பப்பட்ட உறுப்பரிமைக் கட்டணம் அல்லது அன்பளிப்புக்கள், கொடைகள் போன்றன மூலம் சேர்க்கப்பட்ட தொகைகள் தொகுதிக் கிளைப் பொருளாளரால் பதிவுசெய்யப்படும். ஒவ்வொரு மாதக் கணக்கும் விபரங்களுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கட்சியின் பொருளாளர்க்கு அனுப்பப்படல் வேண்டும்.

(xiii) தொகுதிக் கிளையின் செயலாளர் அக் கிளையின் முழு உறுப்பினர் பட்டியலையும் பேணிக் கொள்ளவேண்டும் என்பதோடு அதன் பிரதி ஒன்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் இறுதியில் புதிய உறுப்பினர் பட்டியலையும் உறுப்பினர்களது ஏனைய விபரங்களையும் மத்திய குழுவிற்கு அடுத்த பதினைந்து நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

(xiv) தொகுதிக் கிளையின் உறுப்பினரின் முழுப் பட்டியலையும் பேணிவைத்திருத்தல் மற்றும் கிளையின் வரவு செலவு கணக்குகளை பேணிவைத்திருத்தல் தொடர்பில் மத்திய குழுவிற்கும் கட்சியின் பொருளாளர்க்கும் தொகுதிக் கிளையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கூட்டுப் பொறுப்புடையவர்களாகக் கருதப்படுவர்.

**5.3 மாவட்டக் கிளைகள்**

i. குறித்த நிர்வாக மாவட்டம் ஒன்றின் எல்லைக்குள் நிறுவப்பட்ட அனைத்து தொகுதிக் கிளைகளையும் ஒருங்கிணைத்து மாவட்டக் கிளைகள் நிறுவப்படலாம். பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைய ஒரு மாவட்டக் கிளையை உருவாக்கலாம்.

ii. மாவட்டக் கிளையின் எல்லைகளையும் பகுதிகளையும் நிர்ணயித்துக்கொள்ளவும் அதனில் ஏதேனும் மாற்றம் செய்யவும் மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு.

iii. தனது மாவட்டத்துக்குள் வருகின்ற அனைத்து தொகுதிக் கிளைகளையும் அதன் அலுவல்களையும் இணைப்பதுவும் ஒழுங்குபடுத்துவதும் மாவட்டக் கிளையின் முக்கிய கடமையாகும்.

iv. விதி 5.2 (xi)(ஆ)ல் குறிப்பிட்டவாறு ஒவ்வொரு தொகுதிக் கிளையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா மூன்று பிரதிநிதிகள் மாவட்டக் கிளையின் உறுப்பினர்களாகக் காணப்படுவர்.

v. மாவட்டக் குழுவின் அங்கத்தவர்கள் ஒன்றுகூடி தமக்குள் ஒரு தலைவர் ஒரு செயலாளர் ஒரு பொருளாளர் மற்றும் இரண்டு செயற்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட செயற்குழுவினர் மத்திய குழுவின் கட்டளைகளின் கீழ் தொகுதிக்கிளையின் செயற்பாட்டுக்கு பொறுப்பாக இருப்பர்.

vi. மாவட்டக் கிளையின் பதவி நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அல்லது ஏற்கனவே மாவட்டக் கிளையின் செயற்குழுவின் பதவி நிலையில் உள்ள ஒருவர் பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைக்கமைய மத்திய குழு அத்தகைய ஒருவரையோ அல்லது மாவட்டக் கிளையின் முழு நிருவாக்கத்தினரையோ பதவிநீக்கம் செய்யலாம்.

vii. கட்சியின் மத்திய குழுவினால் காலத்துக்கு காலம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் பற்றுறுதியுடன் செயற்படுத்துவது ஒவ்வொரு மாவட்டக் கிளையினதும் கடமையாகும்.

viii. மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது கிழமையில் இரண்டு மணித்தியாலங்கள் கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இது குறித்த சுருக்கமான அறிக்கை ஒன்று மாவட்டக் கிளை செயலாளரால் மாதாந்தம் கட்சியின் மத்திய குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

ix. மாவட்டக் கிளை ஒன்று ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையேனும் சந்தித்து தமது செயற்திட்டங்கள் குறித்து கலந்துரையாட வேண்டும். மாவட்டக் கிளை ஒன்று தமது மாவட்டத்துக்கு உட்பட்ட மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இது தொடர்பில் மாவட்டக் கிளை மத்திய குழுவினரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.

x. மாவட்டக் கிளை ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி தமது செயற்குழுவினரைத் தெரிவுசெய்தல் வேண்டும். இதன் பொருட்டு நவம்பர் மாதத்தில் ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் மாவட்டக் கிளையின் செயலாளர், தலைவரின் ஒப்புதலுடன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினைக் கூட்டுவார். அக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும் -

(அ) விதி 5.3(v) இல் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாக மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.

(ஆ) குறித்த மாவட்டக் கிளையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கட்சியின் பொதுக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களது எண்ணிக்கையானது குறித்த மாவட்டத்தில் எத்தனை தொகுதிக் கிளைகள் காணப்படுகின்றன என்பதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு தொகுதிக் கிளைக்கு இருவர் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் உறுப்பினர் மாவட்டக் கிளையின் செயற்குழு அங்கத்தவர்களில் ஒருவராகவோ அல்லது மாவட்டக் கிளையின் ஏதேனும் ஒரு உறுப்பினராகவோ காணப்படலாம்.

(இ) மாவட்டக் கிளையின் பொருளாளர் ஆண்டுக்குரிய கணக்கறிக்கையினையும் செயலாளர் செயற்பாட்டு அறிக்கையினையும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

xi. மத்திய குழுவின் அங்கீகாரம் பெற்ற கணக்கு புத்தகத்தில் வட்டாரக் கிளையால் அனுப்பப்பட்ட உறுப்புரிமைக் கட்டணங்கள் அல்லது அன்பளிப்புக்கள் அல்லது கொடைகள் போன்றன மூலம் சேர்க்கப்பட்ட தொகைகள் மாவட்டக் கிளைப் பொருளாளரால் பதிவுசெய்யப்படும். ஒவ்வொரு மாதக் கணக்கும் விபரங்களுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கட்சியின் பொருளாளர்க்கு அனுப்பப்படல் வேண்டும்.

xii. மாவட்டக் கிளையின் செயலாளர் அக் கிளையின் முழு உறுப்பினர் பட்டியலையும் பேணிக் கொள்ளவேண்டும் என்பதோடு அதன் பிரதி ஒன்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் இறுதியில் புதிய உறுப்பினர் பட்டியலையும் உறுப்பினரது ஏனைய விபரங்களையும் மத்திய குழுவிற்கு அடுத்த பதினைந்து நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

xiii. மாவட்டக் கிளையின் உறுப்பினர் முழுப் பட்டியலையும் பேணிவைத்திருத்தல் மற்றும் மாவட்ட கிளையின் வரவு செலவு கணக்குகளை பேணிவைத்திருத்தல் தொடர்பில் மத்திய குழுவிற்கும் கட்சியின் பொருளாளர்க்கும் தொகுதிக் கிளையின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கூட்டுப் பொறுப்புடையவர்களாகக் காணப்படுவர்.

### 5.4 பொதுக் குழு

i தொகுதிக் கிளைக்கு இருவர் என்ற எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டக் கிளையிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் உட்பட பத்தொன்பது பேர் என்கின்ற அதிஉச்ச வரம்பினைக் கொண்டமைந்த வகையில் ஆலோசனை சபையின் பரிந்துரைக்கமைய செயலாளர் நாயகத்தால் நேரடியாக நியமிக்கப்பட்ட பல்வேறு துறைசார் நிபுணர்கள் ஆகியோர் பொதுக் குழுவின் உறுப்பினர்களாகக் காணப்படுவர். எவ்வாறாயினும் இலங்கையில் வாழ்கின்ற (தமிழ்ப் பேசும்) மக்கள் மாத்திரமே பொதுக் குழுவில் அங்கம் வகிக்க முடியும்.

ii கட்சியின் பிரதான நோக்கத்திற்கும் ஏனைய கொள்கைகளுக்கும் அமைவாகவும் தேசிய மாநாட்டுத் தீர்மானத்திற்கமைவாகவும் கட்சியின் செயற்திட்டங்களை

வகுப்பதும் கட்சியின் மத்திய குழுவிற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதும் இப் பொதுக் குழுவின் கடப்பாடாகக் காணப்படும்.

iii பொதுக் குழுவின் உறுப்பினர்கள் ஒன்றுகூடி கட்சியின் மத்திய குழுவிற்கு பொருத்தமான உறுப்பினர்களாக கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களையும் உள்ளடக்கி பதினைந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியும். இப் பதினைந்து உறுப்பினர்களில் கட்சியின் செயலாளர் நாயகம், பொருளாளர், உப செயலாளர்கள் மூவர், செயற்குழு உறுப்பினர் பத்து ஆகியோர் உள்ளடக்கப்படுவர்.

iv பொதுக் குழு ஒவ்வொரு ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூட்டி மத்திய குழுவிற்கு உறுப்பினர்களை தெரிவுசெய்தல் வேண்டும். இதன் பொருட்டு டிசெம்பர் மாதத்தில் ஏழு நாட்களுக்கு குறையாத முன்னறிவித்தலுடன் செயலாளர் நாயகம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தினைக் கூட்ட வேண்டும்.

v செயலாளர் நாயகம் தகுந்த காரணமின்றி பொதுக் குழுவின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை கூட்டாதவிடத்து பொதுக் குழுவின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களது எழுத்துமூலமான கோரிக்கையுடன் கட்சியின் உப செயலாளர் ஒருவர் பொதுக் குழுவினைக் கூட்ட முடியம்.

vi தேவை எனக் கருதப்படுமிடத்தும் அல்லது ஆகக் குறைந்தது வருடத்தில் மூன்று முறையேனும் கட்சியின் பொதுக் குழு கூடுதல் வேண்டும். அத்தகைய பொதுக் குழுக் கூட்டம் முறையானது என்று ஏற்றுக்கொள்ள குறைந்தது அரைவாசி அங்கத்தவரேனும் கூட்டத்துக்கு சமூகமளித்தல் வேண்டும்.

vii மாவட்டக் கிளைகள் தகுந்த காரணங்களோடு வேண்டுகோள் விடுத்த போதும் மத்திய குழு தேவை என்று உணர்ந்த போதும் பொதுக் குழு கூட்டப்படும். அங்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையாத எந்த வேண்டுகோளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(அ) பொதுக் குழுவைக் கூட்ட வேண்டுகோள் விடுக்கும் ஒவ்வொரு மாவட்ட கிளையின் தலைவரும் செயலாளரும் வேண்டுகோளில் கையெழுத்திட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பொதுக் குழு கூட்ட வேண்டிய காரணத்தை எழுத்து மூலம் தெளிவாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) பொதுக் குழு சபையைக் கூட்ட எண்ணும் திகதிக்கு குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரே வேண்டுகோள் விடுக்கப்பட வேண்டும்.

viii. பொதுக் குழுவின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லாதவிடத்து அல்லது பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைக்கமைய மத்திய குழு அத்தகைய ஒருவரை பொதுக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய முடியும்.

ix. கட்சியின் மத்திய குழுவினால் காலத்துக்கு காலம் வகுக்கப்பட்ட கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் பற்றுறுதியுடன் செயற்படுத்துவது ஒவ்வொரு பொதுக்குழு உறுப்பினரதும் கடமையாகும்.

x. செயலாளர் நாயகம் பொதுக்குழு உறுப்பினர் பட்டியலை பேணிக் கொள்ளவேண்டும் என்பதோடு ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் இறுதியில் புதிய உறுப்பினர் பட்டியலையும்

xi. உறுப்பினர்களது ஏனைய விபரங்களையும் அடுத்த பதினைந்து நாட்களுக்குள் மத்திய குழுவிற்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

**5.5 மத்திய குழு**

i மத்திய குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருப்பர் -

1.செயலாளர் நாயகம் உட்பட பொதுக் குழுவால் தெரிவுசெய்யப்பட்ட பதினைந்து பேர்

2. ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கமைய செயலாளர் நாயகத்தால் பொதுக் குழு உறுப்பினர்களிலிருந்து நேரடியாக நியமிக்கப்பட்ட பத்து பேர்.

ii. மேற்கூறப்பட்ட நியமனங்களின் பிரகாரம் மத்திய குழுவில் மொத்தம் இருபத்தைந்து பேர் பின்வரும் பதவி நிலைகளில் காணப்படுவர்

(அ) செயலாளர் நாயகம்
(ஆ) பொருளாளர்
(இ) உப செயலாளர் - 10
(ஈ) செயற் குழு உறுப்பினர் - 13

iii. மத்திய குழுவின் தலைவராக செயலாளர் நாயகம் காணப்படுவார்.

iv. குறித்த ஒரு வருடத்தில் தற்செயலாய் ஏற்படும் மத்திய குழு அங்கத்தவரின் வெற்றிடத்திற்கு பொதுக் குழுவில் உள்ள ஒருவரை நியமிக்கும் அதிகாரத்தினை செயலாளர் நாயகம் கொண்டுள்ளார்.

v. மத்திய குழுவின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லாதவிடத்து அல்லது பொருத்தமற்றவர் என மத்திய குழுவால் கருதப்படும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைக்கமைய மத்திய குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களது சம்மதத்துடன் அத்தகைய ஒருவரை மத்திய குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய முடியும்.

vi. கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடையும் பொருட்டும் தேசிய மகாநாடு மற்றும் பொதுக்குழுவில் தீர்மானித்தவாறும் விடயங்களைச் செயலில் உருவாக்கும் அதிகாரம் மத்திய குழுவிற்கே காணப்படுகின்றது. அது தேசிய மகாநாட்டிற்கும் பொதுக் குழுவிற்கும் மட்டுமே பொறுப்புக் கூறும் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. மேலும் பொதுக் குழுவிலும் தேசிய மகாநாடுகளிலும் காலத்திற்குக் காலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் உருவாக்கப்பட்ட திட்டங்களையும்

கொள்கைகளையும் செயற்படுத்தும் அதிகாரமும் மத்திய குழுவிற்கே காணப்படுகின்றது, மத்திய குழு பின்வரும் விடயங்களினை செயற்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

(அ) கட்சியின் அனைத்து வட்டாரக் கிளைகளையும் தொகுதிக் கிளைகளையும் மாவட்ட கிளைகளையும் ஏனைய ஏதேனும் உப அமைப்புக்களையும் கட்டுப்படுத்தலும், அவற்றின் மேல் அதிகாரம் செலுத்தலும், வழிகாட்டலும், கட்சியின் எல்லாப் பொது செயற்பாடுகளிலும் அவற்றிற்கு ஆலோசனை கூறலும் உதவி செய்தலும்.

(ஆ)நிதி திரட்டலும் அவ்வாறு திரட்டப்பட்ட நிதியினை குறித்த தேவைகளுக்குப் பயன்படுத்தலும்

(இ)வட்டாரக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகள் ஆகியவற்றின் உள்ளும் அவற்றிற்கு இடையிலும் எழும் பிரச்சனைகளையும் முரண்பாடுகளையும் தீர்த்துவைத்தல்.

(ஈ)வட்டாரக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகள் ஆகியவற்றிற்கு ஏற்ற உப விதிகளினை அவற்றின் சுமூகமான நிர்வாகத்தின் பொருட்டு உருவாக்குதல்.

vii. அமைப்பு விதிகளுக்கோ அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்படும் உப விதிகளுக்கோ கருத்து விளக்கம் கொடுப்பதில் மத்திய குழுவின் முடிவே இறுதியானது.

viii. தேவை எனக் கருதப்படுமிடத்தும் அல்லது ஆகக் குறைந்தது இரு மாதத்துக்கு ஒரு முறையேனும் கட்சியின் மத்திய குழு கூடுதல் வேண்டும்.

ix. மத்திய குழுவின் கூட்டம் முறையானதாக அமைய ஆகக் குறைந்தது ஒன்பது அங்கத்தவராவது சமூகமளிக்க வேண்டும். தொடராக மூன்று மத்திய குழுக் கூட்டங்களுக்கு முன் அனுமதி பெறாமல் சமூகமளிக்காத உறுப்பினர் ஒருவர் தமது பதவியை இழந்தவராகக் கருதப்படுவார். அவ்வாறான ஒருவர் தனது பதவியை இழந்ததனை செயலாளர் நாயகம் எழுத்து மூலம் குறித்த நபருக்கு அறிவிக்க வேண்டும்.

x. மத்திய குழுவின் உறுப்பினர்களில் அரைவாசிக்குக் குறையாதவர்கள் கையொப்பமிட்டு எழுத்து மூலமான கோரிக்கையினை செயலாளர் நாயகத்துக்கு விடுப்பதன் மூலம் மத்திய குழுவின் விசேட கூட்டமொன்றினைக் கூட்டுமாறு கோரலாம்.

xi. தேவை ஏற்படும் பட்சத்தில் செயலாளர் நாயகமோ அல்லது மத்திய குழுவானது செயலாளர் நாயகத்தின் இணக்கப்பாட்டுடன் உப குழு, விசாரணைக் குழு முதலியவற்றை நியமிக்கலாம். இக் குழுக்களுக்கு கட்சி உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என்பதுடன் உருவாக்கப்பட்ட காரணங்களுக்காக குறிப்பிட்டளவு அதிகாரங்களையும் வழங்கலாம்.

xii. செயலாளர் நாயகம் மத்திய குழு உறுப்பினர் பட்டியலை பேணிக் கொள்ளவேண்டும் என்பதோடு ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் இறுதியில் புதிய மத்திய குழு உறுப்பினர் பட்டியலையும் அவர்களது ஏனைய விபரங்களையும் அடுத்த பதினைந்து நாட்களுக்குள் மத்திய குழு கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 5.6 செயலாளர் நாயகம்

i. கட்சியின் முதன்மையான பதவிநிலைக்கு உரியவராகவும் கட்சியினுடைய செயற் திட்டங்களை நிறைவேற்றும் மையப் புள்ளியாகவும் செயலாளர் நாயகம் திகழ்வார்.

ii. கட்சியினுடைய பிரதான நோக்கம் மற்றும் ஏனைய கொள்கைகளை அடையும் பொருட்டும் கட்சியினுடைய தேசிய மாநாடு, பொதுக் குழு மற்றும் மத்திய குழு போன்றவற்றால் காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்பட்ட விடயங்களினை நடைமுறைப்படுத்தும் கடமையினையும், பொறுப்பினையும் அதிகாரத்தினையும் கொண்டவராக செயலாளர் நாயகம் காணப்படுவார்.

iii. கட்சியின் செயலாளர் நாயகம் மற்றும் மத்திய குழுவின் தலைவர் என்ற வகையில் கட்சியின் வட்டாரக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகள், பொதுக் குழு மற்றும் மத்திய குழுவின் செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டும் பொறுப்பினைக் கொண்டிருப்பதுடன் தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தினையும் கொண்டிருப்பார்.

iv. கட்சியின் வட்டாரக் கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை, பொதுக் குழு, மத்திய குழு, கட்சியின் ஏதேனும் உப அமைப்புக்கள் அல்லது யாரேனும் உறுப்பினர் கட்சியின் பிரதான நோக்கம் ஏனைய கொள்கைகள், தேசிய மாநாட்டுத் தீர்மானங்கள் மற்றும் இவ் அமைப்பு விதிகள் என்பவற்றிற்கு முரணாக தீர்மானம் ஏதும் நிறைவேற்றுவாராயின் அல்லது செயற்பட்டுக் கொள்ளுவார்களாயின் அத்தகைய தீர்மானத்தினை உடனடியாக இரத்து செய்யும் அல்லது செயற்பாட்டினை நிறுத்தும் அதிகாரம் செயலாளர் நாயகத்துக்கு காணப்படும். எவ்வாறாயினும் ஆலோசனை சபையின் பரிந்துரை ஒன்றுக்கு இணங்கவே இத்தகைய அதிகாரத்தினை செயலாளர் நாயகம் பயன்படுத்த முடியும்.

v. கட்சியின் வட்டாரக் கிளைகள், தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகள், பொதுக் குழு மற்றும் மத்திய குழு என்பவற்றின் யாதாயினும் உறுப்பினர் ஒருவர் கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லாதவிடத்து அல்லது பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் இவ் அமைப்பு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அத்தகைய ஒருவரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தினை செயலாளர் நாயகம் கொண்டிருப்பார்.

vi. கட்சியின் வருடாந்த தேசிய மாநாடுகளிலும், பொதுக் குழுவிலும், மத்திய குழுக் கூட்டங்களிலும் செயலாளர் நாயகமே தலைமை வகிப்பார்.

vii. கட்சி ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பத்தொன்பது நபர்களை பெயர் குறிப்பிட்டு

பொதுக் குழுவிற்கு நியமிக்கும் அதிகாரத்தினை செயலாளர் நாயகம் கொண்டிருப்பார்.

viii. கட்சி ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு பொதுக் குழுவின் அங்கத்தவர்களில் இருந்து பத்து நபர்களை மத்திய குழுவிற்கு பெயர் குறிப்பிட்டு நியமிக்கும் அதிகாரத்தினை செயலாளர் நாயகம் கொண்டிருப்பார். இவ்வாறு நியமிக்கப்படுபவர்களில் ஐவர் உப செயலாளர் பதவியில் இருப்போராகவும் ஏனைய ஐவர் செயற்குழுவின் உறுப்பினர்களாகவும் பரிந்துரைக்கப்படலாம்.

ix. செயலாளர் நாயகம் கட்சியின் முன்னேற்றத்தைப் பற்றிய அறிக்கையை மத்திய குழுவில் சமர்ப்பிப்பார். அத்துடன் இணைக்கப்பட்ட துணை அமைப்புக்களைப் பற்றி மூன்று மாதத்துக்கு ஒரு தடவை மத்திய குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

x. செயலாளர் நாயகம் தனக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றுமாறு கட்சியின் உப செயலாளர்களில் ஒருவரையோ அல்லது வேறு யாராயினும் ஒரு மத்திய குழு உறுப்பினரையோ கோர முடியும் என்பதுடன் தனது கடமைகளை பொருத்தமான விதத்தில் பொறுப்பு ஒப்படைக்கும் அதிகாரத்தினையும் கொண்டுள்ளார்.

xi. செயலாளர் நாயகம் பொருளாளருடனும் எவரேனும் இரு உப செயலாளர்களுடனும் சேர்ந்து கட்சியின் எல்லா நிதிகளுக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாவலராகக் காணப்படுவார். குறித்த உப செயலாளர்களை செயலாளர் நாயகமே தேர்ந்தெடுப்பார்.

**5.7 ஆலோசனை சபை**

i. கட்சியின் பிரதான நோக்கம், கொள்கைகள், தேசிய மாநாட்டுத் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் காலத்துக்கு காலம் பொருத்தமானது எனக் கருதும் சந்தர்ப்பத்தில் கட்சியின் மத்திய குழுவிற்கு ஆலோசனை வழங்கும் பொருட்டும் ஆலோசனை சபை ஒன்று நியமிக்கப்படும்.

ii. ஆலோசனை சபையில் செயலாளர் நாயகம் உட்பட பதினைந்து அங்கத்தவர்கள் காணப்படுவர். இவ் ஆலோசனை சபையின் ஆரம்ப உறுப்பினர்கள் பதினைந்து பேரையும் கட்சியின் ஸ்தாபகர் நியமிப்பார். தற்செயல் நிகழ்வால் ஏற்படும் ஏதேனும் வெற்றிடத்துக்கு அல்லது சுய விருப்பத்தின் அடிப்படையில் எவரேனும் சபையில் இருந்து விலகும் பட்சத்தில் ஆலோசனை சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் செயலாளர் நாயகத்தால் புதிய ஒருவர் நியமிக்கப்படலாம். ஆலோசனை சபையின் உறுப்பினர் எவரேனும் கட்சியின் கொள்கைகளுக்கு ஒவ்வாத முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டால் ஆலோசனை சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் செயலாளர் நாயகத்தால் அவர் நீக்கப்பட்டு புதிய ஒருவர் நியமிக்கப்படலாம். கருத்து

வேற்றுமைகள் இருக்கும் போது செயலாளர் நாயகத்தின் தேர்வே ஏற்றுக் கொள்ளப்படும்.

iii. ஆலோசனை சபையினர் மூன்று மாதத்துக்கு ஒரு தடவையாயினும் கூடி பொருத்தமான விடயங்களை கலந்துரையாட வேண்டும். ஆலோசனை சபையின் கூட்டம் முறையானதாக அமைய ஆகக் குறைந்தது செயலாளர் நாயகம் உட்பட ஏழு அங்கத்தவர்கள் நேரிலோ அல்லது இலத்திரனியல் வழிமுறை ஊடாகவோ சமூகமளிக்க வேண்டும். தொடராக மூன்று ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு முன் அனுமதியின்றி சமூகமளிக்காத அங்கத்தவர் ஒருவர் தமது பதவியை இழந்தவராகக் கருதப்படுவார்.

iv. ஆலோசனை சபையின் உறுப்பினர்களாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் வதியும் தமிழர்கள் நியமிக்கப்படலாம். இவர்கள் கட்சியின் அங்கத்தவர்களாக இருக்க மாட்டார்கள். எவ்வாராயினும் கட்சியின் பிரதான நோக்கத்தின் மீதும் மற்றைய கொள்கைகள் மீதும் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டவர்களாக அவர்கள் காணப்படுதல் வேண்டும்.

v. ஆலோசனை சபையின் தலைவராக கட்சியின் செயலாளர் நாயகம் காணப்படுவார். ஆலோசனை சபை தமக்குள் ஒரு செயலாளரை நியமிக்க வேண்டும். இவர் ஆலோசனை சபை தொடர்பான தீர்மானங்களை மத்திய குழுவிற்கும் செயலாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கும் பொறுப்பினைக் கொண்டிருப்பார்.

vi. ஆலோசனை சபையின் வழமையான தீர்மானங்கள் கூட்டத்துக்கு சமூகமளித்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோரின் சம்மதத்துடனேயே நிறைவேற்றப்படலாம்.

vii. தேர்தல் வேட்பாளர்களை நியமிக்கும் போது ஆலோசனை சபையின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கப்படும் போது ஆலோசனை சபையின் பரிந்துரைகளுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படும். எனினும் கட்சியின் செயலாளர் நாயகத்துக்கே இறுதி முடிவு எடுக்கும் உரித்துண்டு.

viii. கட்சியின் வட்டாரக் கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை, பொதுக் குழு, மத்திய சபை, கட்சியின் ஏதேனும் உப அமைப்புக்கள் அல்லது யாரேனும் உறுப்பினர் கட்சியின் பிரதான நோக்கம், ஏனைய கொள்கைகள், தேசிய மாநாட்டுத் தீர்மானங்கள் மற்றும் இவ் அமைப்பு விதிகள் என்பவற்றிற்கு முரணாக தீர்மானம் ஏதும் நிறைவேற்றுகின்றனர் அல்லது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என ஆலோசனைக்

குழு கருதுமாயின் அத்தகைய தீர்மானத்தினை உடனடியாக இரத்து செய்யும் பொருட்டு அல்லது செயற்பாட்டினை நிறுத்தும் பொருட்டு பின்வரும் நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும் -

(அ) கூட்டத்துக்கு சமூகமளிக்காத உறுப்பினர்களது எண்ணிக்கையையும் உள்ளடங்கலாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையோரது ஆதரவுடன் குறித்த

விடயம் தொடர்பிலான ஒரு தீர்மானத்தினை ஆலோசனை சபையில் நிறைவேற்றவேண்டும்.

(ஆ) இவ் அமைப்பு விதி 5.6(iv) இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி அவ்வாறான முரணான செயல்பாடுகளை நிறுத்துமாறு ஆலோசனை சபை அதன் தலைவரான கட்சியின் செயலாளர் நாயகத்திடம் பரிந்துரைக்க வேண்டும்.

(இ) ஆலோசனை சபை இவ்வாறான ஒரு பரிந்துரையினை முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகம் அதனை ஆலோசனை சபை முன் எடுத்து பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

ix. செயலாளர் நாயகம் தவிர ஆலோசனை சபையின் வேறு யாரேனும் உறுப்பினர் தேர்தலில் போட்டியிட முடியாது. அவ்வாறு போட்டியிட விரும்பின் ஆலோசனை சபையிலிருந்து விலகி இரண்டு வருடங்களுக்கு பின்னரேயே தேர்தலில் போட்டியிட முடியும்.

**5.8 கட்சியின் உறுப்புரிமை**

i. இவ் அமைப்பு விதிகளிலே குறிப்பிடப்பட்டுள்ள கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் இலங்கை வாழ் மற்றும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட பதினெட்டு வயது நிரம்பிய இலங்கைக் குடி (மக்களான தமிழர் அல்லது தமிழப் பேசும்) மக்கள் எல்லோரும் இக் கட்சி உறுப்பினராவதற்கு அருகதை உடையவர் ஆவர்.

ii. கட்சி உறுப்புரிமைக் கட்டணமாக வருடம் ஒன்றுக்கு நூறு ரூபா செலுத்தி உறுப்பரிமை விண்ணப்ப படிவத்தினையும் அதனுடனான உறுதிப்பத்திரத்தை உரியவாறு தயார் செய்து சமர்ப்பிப்பதன் மூலமும் ஒருவர் உறுப்பினர் ஆக முடியும்.

iii. உறுப்புரிமை கோரும் விண்ணப்பம் உரிய படிவத்தில் நிரப்பி கையெழுத்திட்டு உரியவாறு தயார் செய்யப்பட்ட உறுதிப்பத்திரத்துடன் சேர்த்து வருட உறுப்புரிமைக் கட்டணத்துடன் விண்ணப்பதாரரின் பகுதியில் இயங்கும் வட்டாரக் கிளைச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் வாழும் பகுதியில் கிளை ஸ்தாபனம் இல்லாவிடின் கட்சியின் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இலங்கைக் குடிமகன் அல்லாத தமிழர் ஒருவர் அல்லது தமிழ்ப் பேசும் ஒருவர் அல்லது இரட்டைக் குடியுரிமை பெற்ற தமிழர் ஒருவர் அல்லது தமிழ்ப் பேசும் ஒருவர் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக மத்திய குழுவின் அங்கீகாரம் பெற்ற பின் உரிய உறுப்புரிமை படிவத்திலும் உறுதி மொழிப் பத்திரத்திலும் உரியவாறு கையெழுத்திட்ட பின் மத்திய குழுவால் நிர்ணயிக்கப்படும்

விசேட உறுப்பரிமைக் கட்டணத்துடன் செயலாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும். மத்திய குழுவின் அங்கீகாரம் பெறாத விண்ணப்பதாரர் உறுப்பினர் ஆகார்.

iv. உறுப்புரிமைக்கான எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை மத்திய குழுவுக்கு உண்டு.

v. கட்சியின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் பிரதான நோக்கம் மற்றும் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லாதவிடத்து அல்லது பொருத்தமற்றவர் எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் செயலாளர் நாயகம் அத்தகைய ஒருவரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய முடியும்.

**விதி - 6: வருடாந்த தேசிய மாநாடு**

i. வருடாந்த தேசிய மகாநாடே கட்சியின் முழு அதிகாரங்களுக்கும் நிலைக்களனாகும். தேசிய மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் அதனோடு இணைக்கப்பட்ட நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும்.

ii. கட்சி அங்கத்தவர்களும் வரவேற்புக் குழுவால் உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டோரும் தேசிய மாநாட்டிலே கலந்துகொள்ளலாம்.

iii. மத்திய குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கும் இவ் அமைப்பு விதிகளுக்கும் இணங்கும் வகையில் சமர்ப்பிக்கப்படாத எந்த விடயமும் தேசிய மாநாட்டின் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

iv. மத்திய செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட திகதியிலும் இடத்திலும் தேசிய மகாநாடு நடத்தப்படும். செயலாளர் நாயகம் மகாநாடு ஆரம்பிப்பதற்கு ஏழு நாட்களுக்குமுன் செய்தித்தாள் மூலமாக அறிவித்தல் விடுக்கவேண்டும்.

v. தேசிய மகாநாட்டை ஒழுங்கு செய்வதும் கூட்டுவதும் மத்திய குழுவின் பொறுப்பாகும். தேசிய மகாநாடு நடைபெறும் இடத்திலுள்ள மாவட்ட குழு ஒரு வரவேற்புக் குழுவை அமைக்கும். அது மத்திய செயற்குழுவிற்கு மகாநாட்டு ஒழுங்குகளைச் செய்வதற்கு உதவி அளிக்கும்.

vi. ஒரு தேசிய மகாநாடு முறையானது எனக் கருதுவதற்கு ஆகக் குறைந்தது இருநூற்று ஐம்பது பிரதிநிதிகளாவது அம் மாநாட்டுக்கு சமூகம் கொடுக்க வேண்டும்.

vii. கட்சிப் பொதுக் கூட்டங்களில் பொது மக்களின் நிதிப் பங்களிப்புக்கள் பெறப்படும் போது கட்சி நிதி, பொதுத்திட்ட அமுலாக்கல் நிதி, தேர்தல் நிதி என அடையாளப்படுத்தி நிதிகள் பெற்று அவை அன்றன்றோ அடுத்த நாளோ பொருளாளரினால் பதிவு செய்யப்பட வேண்டும். பெறப்படும் நிதிப்பங்களிப்புக்களின் கணக்கு விபரங்கள் செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் கூட்டம் முடிந்து இரண்டு நாட்களுக்குள் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

## விதி - 7: கட்சியின் துணை அமைப்புக்கள்

மத்திய குழு செயலாளர் நாயகத்தின் ஒப்புதலுடன் பின்வரும் தகுதிகளைக் கொண்ட சமூக அமைப்புக்களான இளைஞர் முன்னணிகள், மகளிர் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள், விவசாயி சங்கங்கள், மீனவர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான சங்கங்களை கட்சியின் துணை அமைப்புக்களாக இணைக்கலாம்.

(அ) அவை கட்சியின் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) அத்துடன் மத்திய குழுவினால் விதிக்கப்படும் இணைப்புக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) அவர்தம் வருடாந்த வரவு செலவுக் கணக்குகளையும் அங்கத்தவர் பட்டியலையும் பார்வையிடவும் பரிசோதிக்கவும் எமது கட்சியின் பொருளாளருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

(ஈ) வருடாந்த வேலைத் திட்டத்திலும் கொள்கையிலும் மற்றும் பொருத்தமான எல்லா விடயத்திலும் எமது கட்சியின் ஆலோசனை பெறுதல் வேண்டும்.

## விதி - 8: உடமைப் பாதுகாப்பு

கட்சிக்கு அளிக்கப்பட்ட நன்கொடைப் பணம், நிதிப்பங்களிப்புக்கள், சொத்துக்கள் மற்றும் ஏனைய நிதிகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு தேவை ஏற்படும் பட்சத்தில் நம்பிக்கையாளர்களை நியமிக்கும் அதிகாரத்தினை மத்திய குழு கொண்டுள்ளது. உரியவாறு கட்சியின் பெயரில் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புக்கள் பெயரில் வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டு அவ்வப் பொருளாளர்களாலும் மற்றும் தொடர்புபட்ட உறுப்பினர்களாலும் செயற்படுத்தப்பட வேண்டும். இவை பற்றி செயற்குழுவே உரிய தீர்மானங்களை எடுத்து ஆற்றுப்படுத்தும்.

## விதி - 9: அமைப்பு விதியின் மேன்மைத் தத்துவம்

கட்சியினுடைய பிரதான நோக்கம், கொள்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில் இவ் அமைப்பு விதிகளே அனைத்திலும் மேலான அதிகாரத்தினைக் கொண்டுள்ளன. கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழு, மத்திய குழு என்பவற்றில் எடுக்கப்படும் தீர்மானங்கள் இவ் அமைப்பு விதிகளுக்கு இணங்கியதாகவே காணப்பட வேண்டும்.

## விதி - 10: அமைப்பு விதித் திருத்தங்கள்

வருடாந்த மகாநாட்டில் முன்னறிவித்தலுடன் பிரேரணை வடிவமாகக் கொண்டு வரப்பட்டு சமூகமளித்திருக்கும் பிரதிநிதிகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரால் நிறைவேற்றப்படாத எந்தத் திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**விதி - 11: நிலைமாறுகால விதிகள்**

தமிழ் மக்கள் கூட்டணியின் ஸ்தாபகராக முன்னாள் நீதியரசர் க. வி. விக்கினேஸ்வரன் காணப்படுவார். இக் கட்சியினைக் கட்டமைக்கும் பொருட்டும் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டும் முதலாவது ஆலோசனைக் குழுவினையும், பொதுக் குழுவினையும், மத்திய குழுவினையும் மற்றும் கிளைகளையும் நியமிக்கும் அதிகாரத்தினை இவர் கொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக கட்சியின் தொடக்க காலமான முதல் மூன்று வருடத்திற்கு கட்சியின் பதவி நிலைக்கு பொருத்தமானவர்களை நேரடியாக நியமிக்கும் அதிகாரத்தினையும் தேவை ஏற்படின் ஏதேனும் விசேடமான தீர்மானங்களினை எடுக்கும் அதிகாரத்தினையும் கொண்டிருப்பார். இவ் விதியில் கூறப்பட்டுள்ள விசேட அம்சங்கள் அனைத்தினையும் கட்சி ஆரம்பித்து மூன்று வருட காலத்துக்கு மாத்திரமே பிரயோகிக்க முடியும் என்பதுடன் அதற்கு பின்னர் இவ் விதி (விதி – 11) செல்லுபடியற்றதாகி விடும். ஏதேனும் வலுவான காரணங்கள் நிமித்தம் அவருக்கு இத்தால் கொடுக்கப்படும் அதிகாரங்கள் இன்னொரு வருட காலத்திற்கு நீட்சி பெற வேண்டும் என்றால் அது மத்திய குழுவின் மூன்றில் இரண்டு (2/3) பங்கினரின் தீர்மானம் மூலமே நடைமுறைப்படுத்தப்படலாம்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
ஸ்தாபகரும் செயலாளர் நாயகமும்
தமிழ் மக்கள் கூட்டணி